

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## THE WORD OF CHRIST

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**
**கொலோசெயர் 3:16**

மரம் 3 மே 2003 கனி 6

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# நம்முடைய முற் பிதாக்கள் தேவன் தந்த மாதிரியின்படி செய்து மாறாத அவரை ஆராதித்தார்கள்

☆ நோவா : தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான். ஆதி. 6:22.

☆ மோசே : இவ்விதமாக மலையின்மேல் உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே வாசஸ்தலத்தை நிறுத்துவாயாக. யாத். 26:30

☆ தாவீது : இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றான். 1 நாளா.28 : 19.

***புது உடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்போம்.***

கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். 1 பேது.2:21

***இந்த மாதிரியை பின் தொடர்வோம் !!***

ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும்,
யுத்தத்துக்கு சவுரியவான்களின் சவுகரியமும்
பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும்
ஐசுவரியம் அடைகிறதற்குப் புத்திமான்களின் புத்தியும்
தயவு அடைகிறதற்குப் வித்துவான்களின் அறிவும்

**போதாது**

அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச் செயலும் நேரிடவேண்டும் (பிர. 9 : 11)

FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 3 மே 2003 கனி 6

ஆசிரியருரை

# இரண்டு மனு
# Two Requests



மூவாயிரம் நீதிமொழிகளையும், ஆயிரத்து ஐந்து பாட்டுக்களையும், எழுதிய சாலொமோன்ராஜா தேவனை நோக்கி வேண்டும் போது, “இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன், நான் மரிக்கும் பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும். மாயையையும், பொய்வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்” (நீதி. 30 : 7 - 9) என்றார்.

இன்று நம்முடைய வேண்டுதல் எப்படிப்பட்டதாயிருக்கிறது? சாலொமோனைப் போல ஆண்டு அனுபவித்தவர்கள் உலகில் எவரும் இருக்க முடியாது. “ எனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன்; என் ஞானமும் என்னோடே கூட இருந்தது. என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடை பண்ணவில்லை; என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான்

வேண்டாமென்று விலக்கவில்லை; நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனமகிழ்ச்சி கொண்டிருந்தது; இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினாலும் எனக்கு வந்த பலன். என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை" (பிர. 2: 9-11) எல்லாமே மாயை என்று கண்டறிந்த சாலொமோன் தம்முடைய முதல் மனுவில் மாயையையும், பொய் வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும் என்று கேட்கிறார்.

உலகில் மாயைக்கு அடிபணியாதவர்களே இல்லை என்று சொல்லலாம். எல்லாரும் மாயைக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். "மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும், பயன்படும் எல்லாக் கிரியையும், அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறதை நான் கண்டேன்; இதுவும் மாயையும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறது" (பிர ; 4 : 4). மாயையான உலகத்தில் நாம் காண்கின்ற எல்லாமே ஒரு நாள் மாறிப்போகும் இப்படி மாறிப் போகும் இந்த மாயையைக் கண்டு மனிதன் பொறாமை கொள்கிறான். இதனால் அவன் பொய்சொல்லி பொருள் சம்பாதித்து அயலானுக்கு மேலாக வளர பிரயாசப்படுகிறான். "பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்" (நீதி : 21 : 6). இப்படி ஒன்றுமில்லாமல் போகும் பொருளைச் சம்பாதிப்பதால் என்ன பலன்? சூரியனுக்கு கீழ் பலன் ஒன்றுமில்லையே. "பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி. 21 : 8). இவைகளை ஒருவன் அறிந்தும் பொய்யினால் பொருளை சேர்ப்பானேயானால் அவனுடைய நிலை என்னவாகும்? முன் நிலைமையைப் பார்க்கிலும் அவனுடைய பின்நிலைமை மிகவும் மோசமாயிருக்கும். "நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்". (1 யோ. 1 : 6).

முதல் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த அனனியா தன் மனைவி அறிய நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். பேதுரு அவனை நோக்கி, "பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்ற பின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங் கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று" (அப். 5: 3-5). பொய் சொல்லுகிறவர்களை தேவன் தண்டியாமல் விடார். "உள்ளதை உள்ளதென்றும்,

இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள், இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" (மத். 5 : 37).

சாலொமோனுடைய இரண்டாம் மனு ஒரு சராசரி மனிதனுடைய வாழ்வை பற்றியதாக இருக்கிறது. உலக மக்களின் கூற்று வாழ்ந்தால் பணக்காரனாக வாழ வேண்டும் அல்லது கொடிய தரித்திரனாக வாழ வேண்டும். நடுத்தர வாழ்வை விரும்புவதில்லை, சாலொமோனோ ஒரு சீமானாயிருந்தான். "நாள் ஒன்றிற்குச் சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு, முப்பது மரக்கால் மெல்லிய மாவும் அறுபது மரக்கால் மாவும், கலைமான்களையும் , வெளிமான்களையும், வரையாடுகளையும் கொழுமையான பறவைகளையும் தவிர, கொழுக்கப்பட்ட பத்து மாடுகளும், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும் நூறு ஆடுகளுமாம். " (1 இரா. 4 : 22, 23). மேலும் அவனுக்கு திரளான செல்வமும் இருந்தது. அவனுக்கு நிகரான ராஜாக்கள் அந்நாட்களில் இல்லை அதைப் போல அவனுக்கு இருந்த ஞானத்தைப் போல அவனுக்கு முன்னும் அவனுக்கு பின்னும் ஒருவருக்கும் இல்லை. ஆனால் அவனுடைய வேண்டுகோள் : தரித்திரத்தையும், ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காத படிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும் என்கிறார்.

ஐசுவரியத்தை யாரும் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். மனிதன் வாழ்வதே அதற்காகத் தான். சாலொமோன் இங்கு ஐசுவரியத்தை எனக்கு கொடாதிருப்பீராக என்று சொல்வதன் காரணம்! நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கு என்று குறிப்பிடுகிறார். அந்தப்படியே கர்த்தர் இஸ்ரவேலருக்கு எச்சரிப்பை கொடுத்திருந்தார் என்னவெனில் "நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும் போதும், உன் ஆடு, மாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும், பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும்போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப் பண்ணியவரும், ... என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிரு" (உபா. 8: 12-17) அநேக சமயங்களில் கர்த்தரை அலட்சியப்படுத்துவதற்கு இந்த ஐசுவரியமே மூலகாரணமாயிருக்கிறது. ஆகையால் ஐசுவரியத்தை எனக்கு கொடாதிருப்பீராக என்கிறார்.

சாலொமோன் தரித்திரத்தை வேண்டாம் என்று சொல்வதற்கு முக்கிய காரணம். ஒருவேளை தான் தரித்திரப்படுகிறதினால் திருடி தன் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டு விடும் என்ற அச்சம். "திருட்டுத் தண்ணீர் தித்திக்கும்" (நீதி . 9 : 17) ஆனால் திருப்தியடைந்தவன் தேன் கூட்டையும் மிதிப்பான்" (நீதி. 27 : 7).

ஒருவன் திருப்தியடைந்தவனாக இருப்பானேயானால் அவன் திருட வேண்டிய அவசியமில்லை. திருடுகிறதினாலே தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே தூஷிக்கப்படுகிறது. புறஜாதிகள் மத்தியில் வாழ்ந்த ஒரு பெயர் கிறிஸ்தவரைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். அவர் தோட்டங்களுக்கு போடப்பட்டிருந்த இரும்பு முள்வேலியை களவு செய்து விற்று பிழைத்து வந்தாராம். இதை தோட்டக்காரர்கள் கண்டுபிடித்து அந்த முள் வேலியை அவர் தலையில் சுமத்தி உங்கள் ஆண்டவருக்கும் இப்படித் தான் முட்கிரீடம் சூட்டினார்கள் என்று அவரை அடித்து ஏளனம் செய்தார்களாம். இதனால் அங்கு தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு ஆளாகாதபடிக்கு என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும் என்கிறார் சாலொமோன்.

அனுதின வாழ்வு என்பது அது ஒரு இன்பமான வாழ்வு. நம் ஆண்டவரும் கூட "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிற நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? (மத் : 6 : 26) ஆம் பிரியமான சகோதரனே, சகோதரியே நாம் ஆகாயத்து பட்சிகளைக் காட்டிலும் விசேஷித்தவர்கள். நாம் தேவ சாயலில் உண்டாக்கப்பட்டவர்கள். ஆகையால் தேவன் நம்மை அனுதினமும் போஷிக்க அறிந்திருக்கிறார். எனவே நாமும் சாலொமோனைப் போல "மாயையையும் பொய் வசனிப்பையும் தூரப்படுத்தி, தரித்திரத்தையும், ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாமல் அனுதின படியை எனக்கு அளந்து போஷித்தருளும் என்று விண்ணப்பம் பண்ணுவோம். கர்த்தர் தாமே நம்மை அவ்விதமே போஷித்து காத்து வழிநடத்துவாராக.

## தெரிந்து கொள்ளுங்கள்

### கப்பர் நகூம்


- K.R.K. ரவி ஆசீர்

இப்பட்டணம் கலிலேயாக் கடலின் வடக்கு எல்லையில் அமைந்திருக்கிறது. இயேசு இங்கே அடிக்கடி சென்று தங்கியிருக்கிறார். அநேக அற்புதங்களும் இங்கே செய்திருக்கிறார். இது இயேசுவின் பட்டணம் என்று அழைக்கப்பட்டது ( மத் 9 : 1) ஆனாலும் இப்பட்டணத்தார் மனந்திரும்பாத படியால் "வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர் நகூமே நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்" என்று கர்த்தர் உரைத்தார் ( மத் 11 : 23, 24). அதன்படியே இன்று வரை யாருமே இங்கு குடியேறவில்லை. சிதைந்த நிலையிலுள்ள பல வீடுகளையும் ஜெப ஆலயத்தையும் நாம் இங்கே காணலாம். இயேசுவானவர் ஐந்து அப்பம் இரண்டு மீனைக் கொண்டு 5000 பேருக்கு பகிர்ந்தளித்த இடம் இதன் அருகேயுள்ளது பேதுருவின் வீடு இங்கே இருந்தது.

# ஒன்றின் இழப்பு பலவற்றின் இழப்பாக கருதப்படும்

## The Loss of one may mean the loss of many

**- J.C. Choate**



ஒரு மனிதன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவனாக, தேவனுடைய ஒரு குழந்தையாக, கர்த்தருடைய சபையாகிய அவருடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினனாக மாறுவதைப் பார்க்க எவ்வளவு அருமையானதாக இருக்கிறது ! வேத வாக்கியங்கள், ஒருவன் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் போது, கர்த்தர் அவனை இரட்சித்து, தம்முடைய சபையில் அவனை சேர்த்துக் கொள்கிறார் எனக் கூறுகிறது. (அப். 2 : 38; அப். 2 : 47). அந்த மனிதன் வாரத்தின் முதல்நாள் தோறும் தேவனை ஆராதிப்பதின் மூலமும் (அப். 20 : 7) , கிறிஸ்துவை அனுதினமும் பின்பற்றுவதின் மூலமும் ( 1 கொரி. 15 : 58), பரிசுத்த ஜீவியம் செய்வதின் மூலமும் ( எபே. 4 : 24 - 32), தன்னுடைய எஞ்சிய வாழ்நாட்களில் கர்த்தரிடத்தில் விசுவாசமிக்கவனாய் நிலைத்திருப்பானேயானால், முடிவிலே பரலோகம் அவனுடைய வீடாயிருக்கும் (வெளி. 2: 10). இந்த விசுவாச ஜீவியம் ஜீவிப்பதனுடைய உயிர்நிலை என்னவென்றால் ஒரு கிறிஸ்தவன் போதித்து தன்னுடைய குடும்பத்தையும், நண்பர்களையும் ஆதாயப்படுத்திக் கொள்ளும் சக்தியுடையவனாயிருக்க வேண்டும், அப்போது தான் அவர்களும் பரலோகத்திற்குச் செல்ல முடியும் என்பதாகும்.

இது ஒரு அற்புதமான வாழ்வின் அழகான படமாக இருந்தாலும் கூட, சிலர் விசுவாசத்தின் வழியை விட்டு வீழ்ந்து போவது என்பது ஒரு துக்கமான உண்மையாயிருக்கிறது. இளமையாயிருக்கிறவர்கள் அல்லது தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் இளமையாயிருப்பவர்கள் அடிக்கடி வீழ்ந்து போவார்கள். சில நேரங்களில் சோதனைக்கும், உலகத்தின் வழிகளுக்கும் இணங்கி முதியவர்களும் வீழ்ந்து போகின்றார்கள். அவர்கள் மறுபடியும் இழந்து போனவர்களாக மாறிவிடுகின்றனர், அவர்கள் மனம் வருந்தி கர்த்தரிடத்தில் திரும்பாவிட்டால் அவர்கள் பாவத்திலே சாவார்கள் மேலும் முடிவிலே நித்திய நித்தியமாக இழந்து போன நிலையில் காணப்படுவார்கள். வேறு சிலர் தேவனை ஒழுங்காக தொடர்ந்து ஆராதிக்கத் தவறினவர்களாக வெறுமனே அலைந்து திரிவார்கள். இரட்சிக்கப்பட்ட மக்கள் இழந்து போன நிலையில் காணப்படுவதற்கான காரணங்களில் ஒன்றான மிகப் பெரிய காரணம், அவர்கள் திருமணம் செய்யும்படி ஒரு கிறிஸ்தவனைத் தெரிந்து கொள்ளாததே ஆகும். இப்படிப்பட்ட திருமணங்களில் கிறிஸ்தவர்களல்லாதவர்கள் மனந்திரும்பியிருப்பது, குறைந்த

சதவீதமே ஆகும். ஆனால் 80%க்கும் மேலானவர்களில் கிறிஸ்துவுக்கு வெளியே உள்ளவர்களைத் திருமணம் செய்யும் பலவீனமான கிறிஸ்தவன் காலஞ் செல்ல செல்ல மேலும் பலவீனமடைகிறவனாயிருக்கிறான். முடிவிலே அவன் முழுவதும் மார்க்கத்தை விட்டு விலகினவனாயிருக்கிறான் அல்லது தன்னுடைய மனைவி எந்த பிரிவினையைச் சேர்ந்தவளோ அந்த பிரிவினைச் சபையில் இணைந்தவனாயிருக்கிறான்.

இது என்னுடைய வேண்டுகோள், ஒரு கிறிஸ்தவனாயிருந்தால், நீ ஒரு போதும் கர்த்தரை விட்டு பிரிந்து செல்ல மாட்டாய். நீ அப்படிச் செய்வாயானால், அப்போஸ்தலர் பேதுரு, "அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும், நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது" (2 பேது 2: 21, 22) எனக் கூறினார். பேதுரு என்ன கூறுகின்றார்? அதாவது ஒருவன் கிறிஸ்தவனாய் மாறின பின்பு, விசுவாசத்தை விட்டு விலகினால் நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்புகிறது போலிருக்கிறான். மற்றபடி கூறுவோமேயானால், கிறிஸ்தவன் பாவத்திற்குத் திரும்புகிறான், மறுபடியும் இழந்தவனாய் மாறுகிறான், பிறகு அவனால் ஆதாயப்படுத்தபட்டவர்களுக்கு முன் ஒரு கெட்ட மாதிரியை உருவாக்குகிறான் என்பதாகும். பேதுருவுடைய தீர்மானம் என்னவென்றால் இப்படிப்பட்டவர்கள் மெய்யான மார்க்கத்தை அறியாதிருந்தார் களானால் நலமாயிருந்திருக்கும் என்பதேயாகும். ஏன்? ஏனென்றால், முதலாவது, அவனுடைய பழைய நிலையிலிருந்து அவனை மெய்யான மார்க்கத்திற்குத் திருப்புவது என்பது மிக மிகக் கடினம். மேலும், இரண்டாவது, அவனுடைய நடத்தையின் மூலம், அவன் இழந்து போனவாக மட்டுமல்ல, நீதியின் மார்க்கத்திற்குத் திரும்ப இருக்கின்ற இழந்த நிலையிலுள்ள அவனுடைய குடும்ப அங்கத்தினர் களுக்கு, குழந்தைகளுக்கு, பேரக் குழந்தைகளுக்கு மேலும் பல சந்ததிகளுக்கு அவன் உத்தரவாதியாக இருப்பான். முடிவிலே விளைவானது, இந்த பலவீனமான கிறிஸ்தவன் பழைய நிலைக்குத் திரும்புகிறதினால், சாதாரணமாக எத்தனை நூற்றுக்கணக்கான ஆத்துமாக்கள் நரகத்திற்குச் செல்லக் கூடும்?

மறுபடியும், பேதுரு கிறிஸ்தவனைக் குறித்து, "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே, பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப் போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து

கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:5:11) என்றார். பேதுரு, கிறிஸ்தவன் வளரும்படிக்கு தன்னுடைய ஜீவியத்தில் இந்த குணாதிசயங்களைக் கூட்டிக் கொள்வதின் மூலம் மென்மேலும் தொடர்ந்து வளருவான், அவன் ஒரு போதும் விழுந்து போகான் என்று கூறுகின்றார். எப்படியாயினும், அவன் இவைகளில் குறைவுபட்டால் அவன் கர்த்தர் தனக்கென்று செய்து நிறைவேற்றியிருக்கிறதைக் காணக் கூடாதபடிக்கு குருடனாகிறான். அவனால் தனக்கு முன்பாக இருக்கிற வழியை தெளிவாகப் பார்க்க முடியாது, அவன், பழைய பாவங்களிலிருந்து தான் சுத்திகரிக்கப்பட்டவனாயிருக்கிறான் என்பதை மறந்தவனாயிருக்கிறான். இப்படிப்பட்ட விஷயத்தில், அவன் இழந்து போனவனாயிருப்பான், மேலும் அவன் தன்னோடு கூட மற்ற அநேகரையும் நித்தியமாக இழந்து போனவர்களாயிருக்கும்படி வழி நடத்துவான்.

சகோதரரே, நம்முடைய ஜீவனுள்ள நாட்களெல்லாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் மிக்கவர்களாயிருப்போமாக அப்போது தான் நாம் இவ்வுலகை விட்டுச் செல்லும் போது பரலோகத்திற்குச் செல்ல முடியும். நம்முடைய ஆத்துமாக்களுக்காக மட்டும் விசுவாசமிக்கவர்களாயிராமல், மற்ற ஆத்துமாக்களுக்காகவும், குடும்பத்தாருக்காகவும், நண்பர்களுக்காகவும், கூட விசுவாசமிக்கவர்களாயிருப்போமாக. நிச்சயமாக நீங்கள் இழந்து போனவர்களாயிருக்க விரும்ப மாட்டீர்கள். மேலும் உங்களுக்கு நெருக்கமானவர்களும், உங்களுடைய இருதயத்துக்கு அன்பானவர்களும் இழந்த போனவர்களாயிருக்க விரும்ப மாட்டார்கள்.

நீ ஒரு கிறிஸ்தவனாயிருந்தால், கர்த்தருடைய வார்த்தையை வாசித்து கற்றுக் கொள். அதை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படி. அப்போது நீ இரட்சிக்கப்பட முடியும். உன்னுடைய குடும்பத்தினரை அவர்களுடைய நித்திய நன்மைக்கென்று ஆதாயப்படுத்திக் கொள்ள முடியும்.

நீ, ஒரு விசுவாசமிக்க கிறிஸ்தவனாயிராவிட்டால், தயைகூர்ந்து, உன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, காலம் கடந்து செல்லும் முன் கர்த்தரிடத்திற்குத் திரும்பு. நிச்சயமாக நீ பரலோகத்திற்குச் செல்லக் கூடியவனாயிருப்பாய், உன்னுடைய குடும்பத்தாரும் நீ நேசிக்கிறவர்களும் கூட பரலோகத்திற்கு செல்லக் கூடியவர்களாயிருப்பார்கள்.

## வேத அறிவுப் போட்டி எண் 32 ன் விடைகள்

1. அபிமெலேக் - நியா.9:4
2. காலேப் - யோசு.14:10, 11
3. யோவான் - 1 யோ.4:14
4. தேவன் - எபி. 13:16
5. தெக்கோவாவூர்ஸ்திரீ - 2 சாமு.14:14
6. கர்த்தருடைய - 2 நாளா. 16:9
7. பில்தாத் - யோபு 25:6
8. பவுல் - 2 கொ. 13:5
9. ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார் - ரோ.10:12
10. பவுல் - அப். 20:19

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நம்மில் தேவன் என்ன எதிர்பார்க்கிறார்?

# WHAT DOES GOD REQUIRE OF US AS CHRISTIAN WOMEN?

-Betty Burton Choate



தாய்மார்களாகிய நீங்கள் உங்கள் குழந்தைகள் நாளுக்குநாள் வளர வேண்டுமென விரும்புவீர்கள். தேவனும் தம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய வகையில் வளர வேண்டுமென எதிர்பார்க்கிறார். எவ்வாறு ஒரு குழந்தைக்குகுப் பசி வந்ததும் அது குவா, குவா எனக் கத்தி அழுது பாலுக்கு வாஞ்சிப்பது போல தேவனுடைய குடும்பமாகிய சபையில் பிறந்துள்ள கிறிஸ்தவ ஸ்திரீகளும் திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையுள்ளவர்களாயிருந்து அதைப் பருகி வளர வேண்டுமென தேவன் விரும்புகிறார். 1 பேதுரு 2:3ல் "நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" எனக் கூறப்பட்டுள்ளது. ஞானஸ்நானத்தில் புதிதாக தேவனுடைய குடும்பத்தில் பிறந்துள்ள ஒவ்வொரும் இவ்விதமாக திருவசனத்தின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும். மாம்சத்தில் பிறந்த ஒரு குழந்தை பாலின் மேல் எவ்வளவு வாஞ்சையாயிருக்குமோ அவ்விதமே ஒவ்வொரும் ஞானப்பாலின் மேலின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும்.

அப்படியிருக்கும்போது பாவத்தை விட்டு நாம் விலகியிருக்க முடியும். நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய குடும்பத்தில் அதாவது தேவனுடைய ராஜ்யத்தில் பிறக்க வேண்டும். யோவான் 3:3ல், "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்", தேவனை துதித்து, ஜனங்களெல்லரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் அப்.2:47. எனவே அவருடைய குடும்பத்தில் நாம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இவ்விதமாக நாம் அவருடைய குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் போது நாம் புதிதாக அவருடைய இராஜ்யமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறோம். ஞானஸ்நானத்தில் இவ்விதமாக தேவனுடைய குடும்பத்தில் பிறக்கிறோம். இந்தக் குடும்பம் இயேசுவினால் சம்பாதித்துக் கொள்ளப்பட்ட குடும்பம்.

தேவனுடைய குடும்பத்தில் பிறந்த ஒவ்வொருவரும் வளர வேண்டியவரகளாயிருக்கிறோம். திருவசனமாகிய ஞானப்பாலை பருகி வளர வேண்டும். தேவனுடைய வசனத்தை வாசித்து வளர வேண்டும். பசியுடனிருக்கும் ஒரு குழந்தை தான் பாலுக்கு ஆவலாயிருக்கும். பாலைக் குடித்து வளரும் குழந்தை மட்டுமே புஷ்டியாக இருக்க முடியும். ஆகவே நாமும் தேவ வசனத்தின் மேல் வாஞ்சையாயிருந்து கற்றுக் கொண்டு வளர வேண்டும். தாகமுள்ள பசியுள்ள குழந்தையை போல் வேத வசனத்தின் மேல் வாஞ்சையாயிருந்து கற்றுக் கொண்டு

வளருவதையே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். இது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமானது.

எபி.5:14 "பலமான ஆகார மானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத் தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை யுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்." நாம் நன்மை தீமை எதுவென்று அறிய பயிற்சி செய்ய வேண்டும். தேவனுடைய வசனமாகிய பலமான ஆகாரத்தைப் புசிக்கும் போது நாம் நன்மை தீமை இன்னதென்று அறிந்து கொள்ளமுடியும். தேவனுடைய வசனத்தைக் கற்று அதை நம்மில் பயிற்சி செய்து வளரும் போது இவ்விதமாக நன்மை எது தீமை எது என்பதை அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு தேவ வசனத்தைக் கற்று பயிற்சிக்கும் படி தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். 1 பேது 2:2 திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருக்கும் படி அறிவுறுத்துகிறது. ஆனால் எபி.5:14 நாம் தேவ வசனத்தைக் கற்று பயிற்சி செய்யும்படி அறிவுறுத்துகிறது. அப்போதுதான் நன்மை தீமை இன்னதென்று பகுத்துணர்ந்து கொள்ள முடியும்.

கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்கும் அதிகமான வேறுபாடுகள் உண்டு. சமுதாயம் கிறிஸ்தவர்களிடம் அதிகமான நற்காரியங்களை எதிர்பார்க்கிறது. எபேசியர் 4:17-25 "மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள். அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிற படியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக் கடவன்" எனக் கூறுகிறது. தேவனுடைய குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரும் புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ள வேண்டும். தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவ ஸ்திரீயும் பொய்யைக் களைய வேண்டும். அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் மற்றவர்களுடனே பொய் பேசுகின்றனர். ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் பொய் பேசக் கூடாது. நீங்கள் உங்களுடைய அயலகத்தாருடன் பொய் பேசுகிறீர்களா? அப்படிே பேசுவீர்களானால் கிறிஸ்தவரல்லாதவர்கள் உங்களைக் குறித்து ஏளனமாய் பேசுவார்கள். கிறிஸ்துவர்கள் பொய் பேசக் கூடாது. மற்றவர்களுடன், அண்டைவீட்டாருடன் மெய்யையே பேச வேண்டும்.

நீங்கள் கோபங்கொள்ளு கிறீர்களா? யாருடனாவது சண்டை போடுகிறீர்களா? சில ஸ்திரீகள் தங்கள் கணவன்மார்களோடும் கோபங்கொண்டு சண்டையிடுவார்கள். மாம்சத்திலிருப் பதினால் சில சில நேரங்களில் இவ்விதமாக இருக்கிறோம். ஆனால் நம்முடைய கோபம், எரிச்சல் நாம் படுக்கைக்குச் செல்லும்முன் தணிய வேண்டும், நாம் கோபத்துடனே படுக்கைக்குச் செல்வோமேயானால் மறுநாள் காலையில் அந்தக் கோபம் மிகவும் அதிகரித்து, ஆழமுடையதாகவுமிருக்கும். அதனால் ஆவியில் மட்டுமல்ல சரீரத்திலும் வியாதியுள்ளவர்களாய் மாறிவிடுவோம். கோபம் நம்முடைய சரீரத்திற்கு அல்சர், இரத்தக்கொதிப்பு, தலைவலி போன்ற நோய்களைக் கொண்டு வரும். இவ்விதமாகக் கோபங் கொள்ளும் போது நாம் பிசாசுக்கும் இடங்கொடுத்து விடுவோம். கோபம் பலவிதமான தீமைகளை நம்முடைய ஆவியிலும் சரீரத்திலும் கொண்டு வந்து விடுகிறது. ஸ்திரீகள் தங்களுடைய புருஷர்களோடு எப்போதும் சந்தோஷத்துடனும் சிரித்த முகத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். கோபத்தை நம்மை விட்டு விலக்க வேண்டும். நல்ல மனைவியாக ஒரு சிறந்த மாதிரியாக நாம் நடந்து கொள்ள வேண்டும். அப்போது தான் நாம் பிசாசுக்கு இடங்கொடாமலிருக்க முடியும்.

கிறிஸ்தவ ஸ்திரீகள் நேர்மையான முறையில் வேலை செய்து பிரயாசப்பட வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். எபேசி.26ல் திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசக் கடவன் எனக் கூறுகிறது. ஏவாளும் கூட இச்சித்து சோதனைக்கு இடங்கொடுத்துப் பாவம் செய்தாள். பிசாசுக்கு இடங்கொடாமல் நம்முடைய கைகளினால் வேலை செய்து பிரயாசப்பட வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நீங்கள் கெட்ட வார்த்தைகள் பேசுகிறீர்களா? சிலர் கெட்ட வார்த்தைகள் பேசுகின்றனர். தங்களுடைய அண்டை வீட்டாருடன் பக்தி விருத்திக்கு ஏதுவாக நல்ல வார்த்தைகளையே பேச வேண்டும் (வச.29). இன்னும் சில கிறிஸ்தவ ஸ்திரீகள் புறங்கூறி திரிகிறார்கள். நீங்கள் உங்கள் அண்டை வீட்டாரைக் குறித்து புறங்கூறி திரிகிறீர்களா? இதை தேவன் வெறுக்கிறார். இது மற்றவர்களும் கிறிஸ்தவர்களைக் குறித்து தவறாகப் பேச ஏதுவுண்டாக்கும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார் (எபே.4:15).

இது மாத்திரமல்ல நாம் கனி கொடுக்க வேண்டுமெனவும் தேவன் எதிர்பார்க்கிறார். "நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" (யோவா.15:5) என்றார். மேலும் "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்;" (யோவா.15:1,2). எனவே நாம் இயேசுவில் நிலைத்திருந்து கனி கொடுக்க வேண்டும். "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவா.15 : 8) என்றார். நாமும் இயேசுவின் சீஷர்களாயிருந்து மிகுந்த கனிகளைக் கொடுக்க வேண்டும். அவரில் நிலைத்திருந்து அதிகமான கனிகளைக் கொடுக்க வேண்டும்.

நாம் அவருடைய சீஷர்களாயிருப்போமானால் யோவான் 13 : 34, 35 கூறுவதுபோல நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும். இயேசு நம்மில் அன்பாயிருப்பது போல் நாமும் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்க வேண்டும். அப்படியிருக்கும் போது மற்றவர்கள் நாம் இயேசுவின் சீஷர்களென அறிந்து கொள்ளுவார். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்..... நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்" (யோவா. 13:34-35). கிறிஸ்தவர்கள் இவ்விதமாக இருக்க வேண்டும்.

தேவன் நமது பிதாவாயிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாயிருக் கிறோம். கிறிஸ்து நமது சகோதரராயிருக்கிறார். நாம் தேவனுடைய குடும்பத்தில் அதாவது தேவனுடைய ராஜ்யமாகிய அவருடைய சபையில் பிள்ளைகளாயிருக் கிறோம். கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நாம் ஒவ்வொரும் வேத வசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருந்து, அதைக் கற்று, நன்மை தீமை இன்னதென்பதை பகுத்துணர்ந்து, வளர்ந்து, கனி கொடுத்து இயேசுவின் சீஷர்களாய் தேவனுடைய குடும்பத்தில் நிலைத்திருப்பதையே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார்.

**Sis. Betty Burtor Choate** அவர்கள் வத்தலக்குண்டு கிறிஸ்து சபையார் கூடுமிடத்தில் நடைபெற்ற பெண்களுக்கான சிறப்புக் கூட்டத்தில் அளித்த தேவச் செய்தி இது!.

# காலங்களின் பரம இரகசியம்
# The Mystery of the Ages

நித்தியகாலங்களின் பரம இரகசியம்
- சரியான சமயத்தில் திருப்புமுனை -
அறியவில்லை எக்காலங்களின் முன்னறிவிப்பினை,
அடையாளங்கண்டு கொள்ளப்படவில்லை பிலாத்துவினால்,
நியாயாசனத்தின் பிரபுக்களினால்,
அல்லது கலகக்கார கூட்டத்தினால்,
பாவத்தினாலும் அவமானத்தினாலும்
தலைகுனிந்தவராய்,
இயேசு மிகுந்த சத்தமிட்டு கூப்பிட்டு ஜீவனை விட்டார்.

யார் இருந்தார்கள்
அச்சமயத்திலே
இரட்சிப்பின் கிரயம் செலுத்தப்பட்டபோது?
கண்ணீர் விட்டுக் கொண்டு, நின்றனர் அவருடையதாய்,
யோவான்,
விசுவாசித்த ஒரு சில ஸ்திரீகள்
மற்றும் அவிசுவாசத்தில் பரியாசம் செய்தவர்கள்,
ஆனால் இல்லை
அவரை சுற்றி வந்து கொண்டிருந்த மனிதர்கள்
அவர் போதித்து பூமியை சுகப்படுத்தினதை
அவருடைய சகோதரர்கள் அல்லது சகோதரிகள்
அறிந்து கொள்ளும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை

காலம் கடந்தே அவர்கள் ஏற்றுக்கொண்டனர் அவரை,
உயிர்த்தெழுந்த கர்த்தரை,
எல்லாவற்றிற்கும் மேலான தேவனை,
மனிதனுடைய இரட்சிப்பின் பரிசுத்த ஆட்டுக்குட்டியை,
மகிமையிலே நம்மெல்லாருடைய நியாயாதிபதியை;
காலம் கடந்தே அவர்கள் அறிந்தனர் ஆழமாய்.
- பிரசங்கம் செய் பூமியின் தூர தீவுகளுக்கு -
ஏனென்றால் அந்த குழந்தை முன்னணையில் கிடத்தப்பட்டது
- ஏனென்றால் அந்த மனுஷன் கல்லறையில் கிடத்தப்பட்டார்.
பாவிகளின் இதயங்களில் பிறக்க வேண்டும்,
பாவத்தில் மரித்திருந்தான்
இப்போது பாவத்திற்கு மரித்தவனாய்
மறுபடியும் பிறந்து அவரில் வாழ்கின்றான்
நித்திய நித்தியமாய்.


- *Betty Burton Choate*
தமிழில் J. குளோரி அர்ஜுனன்

**ஒரு வழி**

# வீட்டுச் சபைகளை ஆரம்பித்தல்
# STARTING HOUSE CHURCHES




## பாடம் 28



முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தாங்கள் கூடி ஆராதிக்கும்படிக்கு, சபைக் கூட்டங்களை கொண்டிராதபடியினால் வீடுகளில், கூடி ஆராதித்தார்கள் என்பதே வீட்டுச் சபைகளை ஆரம்பித்தல் என்பதாகும். அவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த மாத்திரத்திலே, அவர்கள் தங்களுடைய வீடுகளில் கூடி ஆராதிக்கத் துவங்கினார்கள். ஆகவே உங்களாலும் முடியுமே.

புதிய ஏற்பாட்டு சரித்திர கூற்றுகளுக்குச் செவி கொடுங்கள்.

* "தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப். 5 : 42)
* "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி ... " (அப். 20 : 20)
* "அவர்களுடைய (பிரிஸ்கில்லாள், ஆக்கில்லாவுடைய) வீட்டிலே கூடி வருகிற சபையையும் வாழ்த்துக்கள்" (ரோம. 16 : 5)
* "ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்" (1 கொரி 16 : 19)
* லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும், நிம்பாவையும், அவன் வீட்டில் கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள்" (கொலோ 4 : 15)
* பிரியமுள்ள அப்பியாளுக்கும், எங்கள் உடன் போர்ச்சேவகனாகிய அர்க்கிப்புவுக்கும், உம்முடைய வீட்டிலே கூடிவருகிற சபைக்கும் எழுதுகிறதாவது " (பிலேமோ. 2)

கருத்தைப் புரிந்து கொள்ளுகிறீர்களா? முதல் நூற்றாண்டில் சபையானது அங்கத்தினர்களின் வீடுகளில் கூடி வந்தது! தேவன் நீங்களும், சமயப் பிழையிலிருந்தும் மனிதனுடைய வஞ்சகங்களிலிருந்தும் வெளியே வரும்படிக்கு இந்தவிதமாக செய்யும்படி எதிர்பார்க்கிறார்.

சுவிசேஷத்திற்கு உங்கள் கீழ்ப்படிதலுக்குப் பின் இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குள்ளாக அமிழ்த்தப்படுவதன் மூலம், நீங்கள் சமுதாயத்தில் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவனாக இருக்க முடியும். ஆனபடியால்,

உங்களுடைய வீட்டில் அல்லது மற்ற தனிப்பட்ட கூடுகையில் கிறிஸ்தவர்களின் கூட்டமாக கூடிவரத் துவங்குவதற்கு நீங்கள் ஒரு வழிநடத்துபவராக இருக்க வேண்டியது அவசியமாகும். தேவனை உண்மையோடு ஆராதிப்பது என்பது உங்களுடைய கடமை என்பதையும் நினைவுகூருங்கள். ஒரு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களின் கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் படிக்கு ஒரு வீட்டுச் சபையை ஆரம்பிக்க பின்வருவனவைகள் சில நடைமுறை ஆலோசனைகளாகும்.

## உங்களுடைய வீட்டில் சபையை ஸ்தாபித்தல்

### 1. தலைமைத்துவமும், தீர்மானங்களும்

உங்களுடையப் பகுதியில் சபையை ஆரம்பிக்கின்ற சமயத்தில், தீர்மானங்கள் உருவாக்கப்பட வேண்டியிருக்கும். உங்களுடைய சமுதாயத்தில் சபை உருவாக்கப்படுவதற்கு காரணமாயிருக்கிற உங்களுடைய தோளின் மேல் பல தீர்மானங்கள் சுமரரும், எப்படியாகிலும், தீர்மானங்களை உருவாக்கும் பொருட்டு முடிந்த அளவு எல்லா கிறிஸ்தவர்களையும் ஒரு குழுவாக கூட்டிச் சேர்க்க வேண்டும். தனிப்பட்ட ஒரு மனிதனுடைய தீர்மானத்தின்படி சபைகளை நடத்துவது ஞானமற்ற செயலாகும். புதிய ஏற்பாட்டில் முழுச் சபையையும் சீர்படுத்தின அந்த தீர்மானங்களை உருவாக்குவதில் முழுச்சபையும் ஈடுபடுத்தப்பட்டது. (அப். 15 : 22). ஆவிக்குரிய தலைமைத்துவத்தின் பொறுப்பு ஒரு மனிதனின் மேல் விழாதபடிக்கு மூப்பர்கள் ஏற்படுத்தப்பட்ட போது அங்கு எப்போதும் மூப்பர்களின் பன்மை காணப்பட்டது. (அப் 14 : 23)

உங்களுடைய வீட்டில் சபை ஆரம்பிக்கையில், நீங்கள் வழி நடத்துகிறவர்களாய் இருக்க வேண்டியிருக்கும். 1 கொரிந்தியர் 16 : 15, 16ல், **ஸ்தேவானுடைய வீட்டார் கொரிந்து பட்டணத்தில் சபையை ஸ்தாபிப்பதில் முதன்மை பொறுப்பினை எடுத்துக் கொண்டனர். அவர்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு தங்களை ஒப்புவித்ததின் மூலம் முதற் பலனாயிருந்தார்கள்.** ஆனபடியால் தலைமைத் தாங்கி நடத்துவது என்பது மற்றவர்களுக்குச் செய்யும் ஊழியமாகும். வெறுமனே தீர்மானங்களை உருவாக்குவதற்குரிய ஒழுங்குமட்டுமல்ல. தங்களை தாழ்த்தி மற்றவர்களின் தேவையில் அவர்களுக்கு வாஞ்சையோடு ஊழியஞ்செய்கிறவர்களை ஜனங்கள் பின்பற்றுவார்கள். இப்படியாக ஒரு சபை ஸ்தாபிக்கப்படுகிறது. சுவிசேஷத்தை பிரசங்கிப்பதின் மூலம் பக்தியுள்ள புருஷரும் ஸ்திரீகளும் முதலாவது சமுதாயத்தில் தேவையிலுள்ளவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு தங்களை அர்ப்பணிக்கும் போதும் ஜனங்களின் சரீர தேவை களைப் பூர்த்தி செய்யும் போதும் மற்றவர்கள் நம்மை பின்பற்றுவார்கள். ஆனபடியால், ஒரு வழிநடத்துபவராக, "**யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம்** (கலா. 6 : 10).

தேவன், சபைக்கடுத்த பணிகளை தீர்மானிக்கின்ற விஷயத்தில், ஸ்திரீகள் தாமாக முன்வந்து பணிவுடன் வேலை செய்ய வேண்டுமென ஏற்படுத்தியிருக்கிறார். எப்படியிருந்தாலும், இது சபைக்கடுத்த அனைத்து பணிகளிலும் ஸ்திரீகள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அர்த்தமல்ல. புருஷர்களே சபைக்கடுத்த முடிவான தீர்மானத்தை உடையவர்களாயிருக்கிறார்கள், இருந்த போதிலும், ஸ்திரீகள் சபையினுடைய பணிக்கு தங்களுடைய சிறந்த ஞானம் விளங்குகின்ற இடத்தில் ஆலோசிக்கப்படலாம்.

**தற்சோதனை:-**

1._____ ஆதிக்கிறிஸ்தவர் அனுதினமும் ...ல் போதித்தார்கள்

(A) பள்ளியில் (B) நூலகத்தில் (C) வீட்டில்

2._____ யார் அப்பியாளுடைய வீட்டிலே கூடினார்கள்?

(A) நகரகவுன்சில், (B) சபை (C) படைவீரர்கள்

3._____ கொரிந்துப் பட்டணத்தில் தன்னுடைய வீட்டாரோடுங்கூட சபை ஊழியத்திற்கென்று தங்களை ஒப்புவித்தவன் யார்?

(A) பவுல் (B) தீமோத்தேயு (C) ஸ்தேவான்.

ஆம்/இல்லை : நீங்கள் வேதாகமத்தில் கற்றுக் கொண்டிருக்கிறவற்றை உற்சாகத்துடன் மற்றவர்களுக்குப் போதிக்கின்றீர்களா?

**வேதவாசிப்பு** :- மத் : 20 : 20 - 28; லூக் 22 : 24 - 30

**வேத ஆராய்ச்சி:-** **வழி நடத்துகிறவர்கள் சபையை நேசிக்கிறார்கள்:** மத். 20 : 28 ; யோவா 10 : 10; 13 : 34, - 35; 15 : 13, **வழிநடத்துகிறவர்கள் மாதிரிகளாயிருக்கிறார்கள்** 1 கொரி . 11 : 1; பிலி 4 : 9; 1 தீமோ 4 : 12; 1 பேதுரு 5:2, 3 **வழிநடத்துகிறவர்கள் ஊழியஞ்செய்கிறார்கள்** : மாற். 10 : 45; 1 கொரி. 16 : 15, 16; கலா. 6 : 1, 2 ; எபி. 13 : 17, **வழிநடத்துகிறவர்கள் ஒப்புக் கொடுக்கிறார்கள்** மாற் 16 : 15; அப் 20 : 24; பிலிப் 3 :14; நியாயா. 5: 2

## பொது அறிவுக்களஞ்சியம்

### ஐக்கிய நாடுகள் நிறுவனம்

1945-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24-ம் நாள் நிறுவப்பட்டது. தொடக்கத்தில் 51 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். தற்போது 188 உறுப்பினர்கள் உள்ளனர். தொடக்க 51 உறுப்பினர்களில் இந்தியாவும் ஒரு அங்கத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. 111 விதிகளைக் கொண்டது இதன் சாசனம்.

## ஜெபியுங்கள்

★ பத்தாவது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்காக...

★ அலுவலக பணிக்கு ஒரு கம்ப்யூட்டர் தேவை...

★ சார்ஸ் நோயிலிருந்து மக்கள் காக்கப்பட



# சந்திப்போம் - சிந்திப்போம்

உரையாடல் – 9

D. எபிநேசர்

***யோனத்தான் :*** அந்தச் சோகக் கதையைக் கொஞ்சம் சொல்லுப்பா.

***தாவீது :*** சோகக் கதையானாலும் அது கட்டுக்கதையில்லப்பா. உலகத் தோற்றத்தின் போது நடந்த உண்மைக்கதை. எல்லா உயிரினங்களையும் எல்லா பிரமாண்டமான படைப்புகளையும் படைச்ச நம் தேவன், மனிதனைப் படைக்கும்போது விசேஷ கவனம் எடுத்துக்கிட்டாரு. மனிதனை எப்படிப் படைக்கலாம்ங்கறதைப் பத்தி தன் தேவத்துவ சகாக்களோடு ஆலோசனை நடத்தினாரு. கடைசியில, தம்முடைய சாயலா படைக்கறதுன்னு தேவன் தீர்மானிச்சாரு.

***யோனத்தான் :*** மனுஷனுக்கு மட்டும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம்?

***தாவீது :*** அவன் மேல தேவன் வைத்த அன்புதான். அதுமட்டுமில்ல எல்லாப் படைப்புகள் மீதும் அவனுக்கு ஆளுகையைக் கொடுத்தாரு. எல்லா உயிரினங்களுக்கும் பேர் வைக்கக் கூடிய வி.ஐ.பி.யா ஆக்கினாரு. எல்லாத்துக்கும் மேல உலகத்தில் இருக்கும் மற்றப் படைப்புகள் மாதிரியெல்லாம் நம்மை படைக்காம, தம்முடைய சாயல்ல நம்மைப் படைக்கிறார்னா நம்ம மேல எவ்வளவு அன்பு வச்சிருக்காருன்னு பார்த்துக்கோ!

***யோனத்தான் :*** உண்மைதான் தாவீது. ஆனா தேவனுக்குத்தான் உருவமே இல்லையே! அப்புறம் எப்படி அவரை மாதிரியே நம்மை உருவாக்கியிருக்க முடியும்?

***தாவீது :*** தேவன் உருவமற்றவர் என்பது உண்மைதான். அவர் ஆவியா இருக்காரு. மனுஷன் சரீரத்துல போர்த்தப்பட்டிருந்தாலும் அவனை ஆவிக்குரியவனாகப் படைச்சிருக்காரு. வேற எந்த உயிரினமும் அப்படிப் படைக்கப்படல. அந்த ஆவிக்குரிய மனுஷன்தான் தேவசாயல்ல இருக்கான். தன் ஜீவ சுவாசத்தை அவனுக்குள்ளே ஊதி அவனை ஜீவாத்துமாவாக்கினாரு. அவருடைய சாயல் அப்படின்னா, அதாவது அவரைப்போல் பரிசுத்தமா, பாவம்னா என்னென்னே தெரியாத அளவுக்கு, தீமையே தெரியாம நன்மை மட்டுமே செய்யக் கூடியவனா, உயர்ந்த நற்பண்புகளோட, தன்னைப் போலவே அவனுடைய ஆத்துமா என்றைக்கும் உயிரோடிருக்கும்படி படைச்சாரு.

***யோனத்தான் :*** அடேங்கப்பா! எவ்வளவு சிறப்பா படைச்சிருக்காரு!

***தாவீது :*** ஆவிக்குரிய காரியங்கள்ல மட்டுமில்லே, சரீரத்திலும் அவனை பிரமிக்கத்தக்க அதிசயமா படைச்சு, பராமரிச்சாரு.

***யோனத்தான் :*** அப்படியா அது என்ன?

***தாவீது :*** அதை அடுத்த முறை சொல்றேன். இப்பப் போலாமா? *Bye...*

# நன்றியுள்ள குஷ்டரோகி

S. பிச்சைமுத்து

பிரியமுள்ள உங்கள் யாவருக்கும் அன்பும், இரக்கமும் மிகுந்த இயேசுகிறிஸ்துவின் புண்ணிய நாமத்திலே வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

நமதாண்டவர் செய்த அநேக அற்புதங்கள் நமக்கு படிப்பினை தருவதாக இருக்கிறது. அவைகளில் லூக்கா 17 : 11 முதல் 19 வரை நாம் வாசிப்போமானால் பத்து குஷ்டரோகிகள் சுகமடைவதைப் பார்க்கிறோம். இந்த குஷ்டரோகம் எவ்வளவு பயங்கரமானது என சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

*பழைய ஏற்பாட்டில் குஷ்டரோகிகளின் நிலை :*

லேவி. 13 : 2 முதல் 42 வரை அதன் சாராம்சம் யாதெனில் (எண். 5 : 2) குஷ்டரோகிகள் பாளையத்திற்கு புறம்பேயிருக்க வேண்டும். தங்கள் உறவினர்களையோ, குடும்பத்தாரையோ பார்க்க விரும்பினால் கழுத்தில் கட்டியிருக்கும் மணியை அசைத்துக் கொண்டே தீட்டு, தீட்டு என கூறிக் கொண்டே வந்து பார்க்க வேண்டியவர்களை பார்த்து விட்டு மீண்டும் பாளையத்திற்கு புறம்பே சென்று விட வேண்டும். மொத்தத்தில் ஒரு அருசையான துர்நாற்றத்துடன் கூடிய வாழ்வு என்றே கூறலாம்.

அப்படிப்பட்ட பத்துப் பேரைத்தான் நமதாண்டவர் இலவசமாக சுகமாக்கினார். விளைவாக நடந்தது என்ன ஒரே ஒருவன் தான் திரும்ப வந்து நன்றியைத் தெரிவித்து தேவனை மகிமைப்படுத்தினான்.

*கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்னர் நம் நிலை :*

(எபேசியர் 2 : 2) 1. அக்கிரமங்களால் , பாவங்களால் மரித்துப் போனோம். 2. ஆத்துமாவில் மரித்து நடைபிணங்களாய் இருந்தோம். 3. தேவனற்றவர்களாய் இருந்தோம். 4. பிசாசின் பிள்ளைகளாய் இருந்து எல்லா அருவருப்புகளையும் ஆவலாய் நடப்பித்தோம். ஆனால் இப்போது

(1 யோவா. 1: 7) அவரது இரத்தத்தால் நம்மை கழுவி (யோவா. 1 : 12-13) தேவனுடைய பிள்ளைகள் என்கிற அந்தஸ்த்தைக் கொடுத்து (எபே. 2 : 7) உன்னதங்களில் அவரோடு உட்காரும் பாக்கியத்தைக் கொடுத்தார்.

*அவருக்குக் காட்டும் நன்றி என்ன ?*

பிரியமானவர்களே இன்றைக்கு அநேக தேவ பிள்ளைகள் தங்கள் குறைச்சல்களை முன் வைத்து முறுமுறுக்கிறவர்களாக இருக்கிறோமே இது ஏன்? உலக ஆசீர்வதங்களுக்காக ஏங்குகிறோம்.

*முறுமுறுப்பை தேவன் வெறுக்கிறார் :*

எகிப்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் அடிமை வேலை செய்து ஆளோட்டிகளால் வெகுதுன்பப்பட்டனர் (ஆதி. 15 : 13) இந்த ஜனங்களை

ஒருவரிப்பாடம் 27 ன் விடைகள்

1.A, 2.B, 3.C,

எகிப்திலே பத்து வாதைகளை நடப்பித்து விடுதலையாக்கி, பாலும், தேனும் ஓடுகிற மகாசெழிப்பான தேசமாகிய கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்ல வாக்குத் தத்தம் பண்ணுகிறார். (யாத். 12 : 35-36) 1. வெள்ளியுடனும், பொன்னுடனும் புறப்பட்டார்கள். 2. 40 ஆண்டுகளாய் அவர்களது வஸ்திரங்கள் பழசாகவில்லை, பாதரட்சையின் வார் அறுந்து போகவில்லை. 3. யாத் 13 : 22 பகல் வெயிலில் இருந்து பாதுகாக்க அக்கினிஸ்தம்பம் இவ்வளவு அற்புதமாய் வழிநடத்தின தேவனுக்கு இவர்கள் காட்டின நன்றி என்ன தெரியுமா?

*முறுமுறுப்பு* : (யாத். 16 : 2 - 3) சீன் வனாந்தரத்திலே எகிப்திலே சாப்பிட்ட இறைச்சியையும், வெங்காயத்தையும், வெள்ளைப் பூண்டையும் நினைத்து மாபெரும் ஆசீர்வாதத்தை அசட்டை செய்தனர். நாங்கள் எகிப்தில் செத்துப் போயிருந்தால் தாவிளை என்கிறார்கள் என்றால் எந்த அளவு தேவன் கொடுத்த விடுதலையை உணராதிருந்திருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள் (உபாகமம் 9:7) நீ வனாந்தரத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினதை நினை ... கலகம் பண்ணினீர்கள். ஆகையினால் தான் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குள் யோசுவா, காலேப் தவிர மற்ற ஒருவரும் பிரவேசிக்க முடியாமல் போயிற்று (எண். 26 : 65, எண். 32: 11- 12).

இன்று நம்முடைய வாழ்க்கையிலே தேவன் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். 1. இரட்சிப்பு, 2. வேலை, 3. குடும்பம், 4.சரீர ஆரோக்கியம், உணவு, தண்ணீர், காற்று, சூரிய வெளிச்சம் இவைகளுக்கு நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டாமா? (எபே. 2 : 6) கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக (எபே. 2 : 7) கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்.


எவ்வளவு மேன்மையான ஆசீர்வாதங்களை கர்த்தர் நமக்குத் தந்திருக்கிறார் என்பதைப் பாருங்கள். தேவன் நமக்குச் செய்த இந்த நன்மைகளுக்கு நாம் என்ன கிரயம் செலுத்தினோம் ஒன்றுமில்லையே ஆனால் நம்மை மீட்க தேவன் தம் ஒரே பேறான குமாரனைத் தந்தாரே (யோவான் 3 : 16).

எல்லாவற்றிலும் நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள். அந்த ஒன்பது குஷ்டரோகிகளைப் போலவும், எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர்களைப் போலவும் நாம் இருப்போமானால் பரலோக ராஜ்யத்திற்கு அபாத்திரர்களாக ஆகி விடுவோம். மாறாக ஆண்டவருக்கு நன்றி சொல்ல வந்த அந்த ஒரு குஷ்டரோகியைப் போல தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் நன்றியுடையவர் களாயிருப்போம். அப்போது தேவன் மகிமைப்படுவார்.

சிறுவர் பகுதி

# பத்து வெள்ளிக்காசு

வேத பகுதி : லூக்கா 15 : 28—10



ஒரு நாள் இயேசுவினுடைய உபதேசங்களை கேட்க ஆயக்காரர்களும், பாவிகளும் கூடிவந்தனர். அப்பொழுது பரிசேயரும், வேதபாரகரும் முறுமுறுத்து இவர் பாவிகளோடு சாப்பிடுகிறார் என்றனர். இதை கண்ட இயேசு ஆண்டவர் அவர்களுக்கு ஒரு உவமையை சொன்னார். அது என்ன உவமை தெரியுமா?

ஒரு ஸ்திரீ 10 வெள்ளிக்காசு வைத்திருந்தாளாம். அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற் போனதாம். உடனே அந்த வெள்ளிக் காசை தேடு தேடுனு தேடி எங்கும் காணவில்லையாம். இரவு நேரம் வேறு ஆகிவிட்டதாம். ஆகையால் அவள் ஒரு விளக்கை கொளுத்தி அதை எப்படியாவது கண்டு பிடிக்க வேண்டுமென்று வீடு முழுவதையும் பெருக்க ஆரம்பித்து, பெருக்கிக் கொண்டே வரும் போது இதோ அந்த வெள்ளிக்காசு என்று கண்டு மிகவும் ஆனந்தம் கொண்டு தன் சிநேகிதிகளையும், அயல் வீட்டுக்காரிகளையும் வரவழைத்து, காணாமற் போன என் வெள்ளிக் காசைக் கண்டுபிடித்தேன் என்னோடு கூட சந்தோஷப்படுங்கள் என்றாளாம். நாமும் கூட அப்பா நமக்கு கொடுத்த ஒரு காசை காணாமற் போட்டு விட்டால் போனால் போகட்டும் என்று விட்டு விடுவோமா அதை கண்டுபிடிக்கும் வரை தூங்க மாட்டோம் இல்லையா?

அதைப் போல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். அன்பான தம்பி தங்கைகளா நாமும் இந்த வெள்ளிக் காசைப் போன்றவர்கள் தான். காணாமற் போன வெள்ளிக் காசாகிய நம்மை தேடவும் ஒன்று சேர்க்கவும் நம் இயேசு ஆண்டவர் இந்த உலகத்திற்கு வந்தார். நாம் தவறு செய்யும் போது காணாமற் போன வெள்ளிக் காசைப் போலாகிடுவோம். செய்த தவறை உணர்ந்து மனந்திரும்பும் போது கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளிக்காசைப் போல சேர்க்கப்படுவோம். அப்பொழுது பரலோகத்திலும் தேவதூதருக்கு முன்பாகவும் சந்தோஷமுண்டாயிருக்கும்.

## மனப்பாட வசனம்

*"நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்"* *(லூக்கா 13 : 3)*

## வேத அறிவுப்போட்டி எண் 32ல் வெற்றிபெற்றவர்கள்

1. S. எஸ்தர் மெர்சி - வத்தலக்குண்டு
2. S. வைலட் சுந்தர் சிங் - வாடிப்பட்டி
3. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
4. S. ஆனந்தராஜ் - ஈரோடு
5. IRA. எதிராசன் - சங்ககிரி
6. S. செல்லமணிஆறுமுகம் -Y.ஒத்தக்கடை
7. A. ரெபேக்காள் - வடிவேல்கரை
8. V. சரவணகுமார் - கோவை
9. D. சமாதான ராஜா- செட்டிப்பாளையம்
10. Mrs. கிரேஸ் லூயிஸ் - நிலக்கோட்டை
11. A. மேரியம்மாள் - மதுரை
12. குளோரி பவுல்சர் - சென்னை
13. S. தண்டபாணி - சிலுவத்தூர்
14. Mrs. கலாவதி ராஜா - கோபாலபுரம்
15. J.S. நிர்மலா ஜான் - மதுரை
16. Mrs. லலிதா பிரேம்குமார் - மதுரை
17. N. கஸ்தூரி - திருவண்ணாமலை
18. V. கோவலன் - மதுரை.
19. Mrs. வனிதா சாமுவேல் - காமலாபுரம்
20. K. சாந்தி - T. வாடிபட்டி
21. T. ஜான்பாலன் கென்னடி - நாசரேத்
22. G.P. ஏசையன் ராஜ் - கோபி
23. A. ஜோதிசுந்தரம் - பாண்டியநெல்லூர்
24. M. சௌந்தன்யா - பண்ணைப்புரம்
25. P.M. சத்தியவாசகன் - சேலம்
26. L. மனாசேமண்ணு - சித்தூர்(A.P)
27. M. சாலொமோன் - பெங்களூர்
28. N. ஜேம்ஸ் - செட்டிப்பாளையம்
29. S.R. பெரியசாமி - சேரூர்
30. S. காமாட்சி - வத்தலக்குண்டு
31. M. ரோஸ்மேரி - சென்னை
32. A. தங்கமுத்து - பொங்கலூர்
33. Mrs. ஜெயந்திநோயல் - சேலம்
34. Mrs. செல்வி சத்யசீலன்

**போட்டியாளர்கள் கவனத்திற்கு**

- உங்கள் பதில் அஞ்சல் அட்டையில் தெளிவாக எழுதி அனுப்பப் பட வேண்டும்.
- உங்கள் பெயர் மற்றும் முகவரி, பதில் அனைத்தும் தமிழில் எழுதப்பட வேண்டும்.
- உங்கள் விடைகள் அந்த மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேர வேண்டும்.

**கிறிஸ்துவின் வசன மாதஇதழ் வளர்ச்சிக்கு உதவ முன் வருகிறவர்கள் கவனத்திற்கு**

**உங்களுடைய உதவியை வங்கி காசோலை மூலமாகவோ அல்லது மணியாடர் மூலமாகவோ THE WORD OF CHRIST என்ற பெயரில் அனுப்பி வைக்கவும். நன்றி.**

**ஆசிரியர்**

**Editor**
**THE WORD OF CHRIST**
P.O. Box 5, Batlagundu - 624 202. S.INDIA. ✆ 04543 - 263278

**பொருள்** : ஒரு மணப்பெண்ணிற்கும், மணவாளனுக்கும் உள்ள அன்பின் காதல் பாடல்கள்

**ஆக்கியோன்** : சாலொமோன்

**காலம்** : ஏறக்குறைய 971 - 931 கி.மு.

**திட்டவரைக்** :

★ நேசத்தின் ஒரு பகுதியாக பேராவல் இருக்கிறது (அதி.1)

★ நேசம் அமைதியாயிருக்காது. வசந்தமும் நேசமும் இணைந்து செல்லுகிறது (அதி.2)

★ நேசம் சிநேகத்தினால் மிகுதிப்படுத்தப்படுகிறது (அதி.3)

★ நேசம் அழகை மட்டுமே காண்கிறது (அதி.4)

★ நேசம் வேதனைக்குரிய சாத்தியக் கூறுகளை துணிந்து சந்திக்கிறது (அதி.5)

★ வார்த்தைகளினால் நேசத்தை வெளிப்படுத்த முடியாது (அதி.6)

★ நேசம் தாராளமாய் கொடுக்கக்கூடியது? (அதி.7)

★ உண்மையான நேசம் விலைமதியில்லாதது (அதி.8)

## *சிறப்புச் செய்தி :*

"நீர் என்னை உமது இருதயத்தின் மேல் முத்திரையைப் போலவும், வலது புயத்தின் மேல் முத்திரையைப் போலவும் வைத்துக் கொள்ளும், நேசம் மரணத்தைப் போல் வலிது; நேச வைராக்கியம் பாதாளத்தைப் போல கொடிதாயிருக்கிறது."

## *வரலாற்று பின்னணி :*

ஒரு ஆணிற்கும், பெண்ணிற்குமிடையே உள்ள அன்பின் அழகையும், மென்மையையும், எடுத்துக் காட்டுதல் ; தேவன் மனுக்குலத்தின் மீது பாராட்டும் நெருக்கிய, ஆழமான அன்பிற்கு ஒரு அடையாளமாகவும் விளக்கப்படுகிறது.



*இந்தியாவில் 1,650 மொழிகள் பேசப்பட்டு வருகிறது. இதில் 176 மொழிகளில் மட்டும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.*

# வேத அறிவுப் போட்டி எண். 33

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

**கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

Ref.No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.

1. என்னில் ஒரு அக்கிரமமம் இருந்ததேயானால் நீரே என்னைக் கொன்று போடும் என்று யார் யாரைப் பார்த்து சொல்வது?
2. தன் தகப்பனைப் பார்த்து : என் தலைநோகிறது, என் தலை நோகிறது என்றவன் யார்?
3. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்து கிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா?
4. போர்க்களத்து முனையிலே தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்குத் துணிந்து நின்றவர்கள் யார்?
5. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது யாருடைய ஈவு?
6. இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய் எதன்கீழ் அடைத்துப் போட்டது?
7. எதனால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள் என்று கர்த்தர் குறிப்பிடுகிறார்?
8. பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், அவர்களுக்கு எப்படி உபதேசிக்க வேண்டும்?
9. பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும், உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு எப்படிப்பட்டவராயிருக்கிறார்?
10. தன் காலத்தை யார் அறியான்?

## நடப்புச் செய்திகள்

★ இந்தியாவை வளர்ந்த நாடாக, வல்லரசாக மாற்ற வேண்டும் எனில், பொது வாழ்வில் இருந்து ஊழலை முற்றிலும் ஒழிக்க வேண்டும், அப்பொழுது தான் 2020ம் ஆண்டில் இந்தியாவை வளர்ந்த நாடாக பார்க்க வேண்டும் என்ற நம் எண்ணக் கனவு நனவாகும் என ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம் கூறியுள்ளார்.

★ சார்ஸ் நோய் குறித்த தகவல்களை மூடி மறைப்போருக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என சீன பிரதமர் வென்ஜியாபோ தெரிவித்துள்ளார்.

★ நாடு முழுவதும் உள்ள வயதானவர்கள் எண்ணிக்கை 10 கோடியை எட்டியுள்ளது என்று மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் துறை தலையிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

★ சர்வதேச விண் ஆராய்ச்சி நிலையத்தில் நீண்ட நாட்களாக தங்கியுள்ள இரண்டு அமெரிக்கர்களையும், ஒரு ரஷ்ய வீரரையும் அழைத்து வருவதற்காக ரஷ்யாவின் சோயூஸ் விண்கலம் ஏப்ரல் 26ம் தேதி இரண்டு வீரரர்களுடன் கசகஸ்தானில் உள்ள பைகானூர் ஏவுதளத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.


★ தமிழக சப்ஜுனியர் செஸ் சாம்பியன் போட்டியில் ஆண்கள் பிரிவில் அருண் பிரசாத்தும், பெண்கள் பிரிவில் சிவசங்கரியும் சாம்பியன் பட்டத்தை வென்றனர்.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. Editor : B. Arjunan.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th May 2003.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 a.m 7.00 a.m | Box. 3815 New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon Wed,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80 Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m 5.45 p.m | Box. 8405 Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Box. 5540 Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine** **FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.

E-mail : batlagunduchurchofchrist@rediffmail.com